DEPOSITION OF WITNESSES
(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No. 2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC.373/2018 |
| Depostition of witness for | Prosecution wit. PW.6 |
| Name | கோகிலா |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 15-07-2022

<u>முதல்விசாரணை</u>

நான் தற்போது காயல்பட்டினம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.6.2018 அன்று திருவைகுண்டம் அரசு மருத்துவமனையில் ணிபுரிந்த போது முதலைமொழியை சேர்ந்த சுப்பிரமணியன் வயது 55 என்பவர் தனது மனைவி மீனா என்பவருடன் காலை 10.15 மணியளவில் மருத்தவனைக்கு வந்து தன்னை அடையாம் தெரிந்த ஒரு ஆண் மற்றும் 2 பெண்கள் செங்கல் வைத்து அடித்து முட்டியில் மதித்து காயம் ஏற்படுத்தியதாக கூறினார் மேற்கூறிய சம்பவம் 14.6.2018 அன்று காலை 8.30 மணியளவில் தனது வீட்டில் வைத்து நடந்ததாக கூறினார் அவரை பரிசோதிக்கும் போது

சுயநினைவுடன் காணப்பட்டார். காயங்கள் சீராய்ப்பு காயங்கள் 5X5cm என்ற அளவில் இடது முட்டியில் காணப்பட்டது இடது முட்டியில் தொடு உணர்வு வலி இருந்தது அவர் மேற்படி சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு அவருக்கு அளித்த சிகிச்சை விவரத்தின் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று 2.8.2018 அன்று என்னால் சான்று வழங்கப்பட்டது. அவருக்கு முதலுதவி அளித்து விபத்து பதிவேடு வழங்கப்பட்டுள்ளது. விபத்து பதிவேட்டு நகல் **அ.சாஆ.4** ஆகும்.

<u>குறுக்குவிசாரணை</u>

சீராய்ப்பு காயம் வேகமாக கீழவிழுந்தால் ஏற்படக்கூடியது என்றால் சரிதான். வலி என்பவது பாவனையாக கூட இருக்கலாம் என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை.